பெரம்பலூர் நகராட்சி ஆணையாளர்(மு.கூ.பொ) அவர்களின் செயல்முறைகள்
பிறப்பிப்பவர் : திரு.அ.கண்ணன்., பி.ஏ.,

ந.க.எண்.1593/2026/எப்1 **நாள்.08.04.2026**

பொருள்:	தொழில்நுட்ப ஒப்புதல் வரைபடம் (திட்டமில்லாத பகுதி) – பெரம்பலூர் நகராட்சி – வார்டு எண் –15, சர்வே எண் – 148/2F1B,2F2B2,–ல் 0.23 ஏக்கர் (அ) 932.00 ச.மீ பரப்பளவு ம. வ/ ந. ஊ. து. இ (பெ.மா) எண்.31/2026–ன்படி தொழில்நுட்ப அனுமதி வழங்கப்பட்டது – உத்திரவு வழங்குதல் – தொடர்பாக.
பார்வை:	நகர் ஊரமைப்பு துணை இயக்குநர், மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம், பெரம்பலூர் அவர்களின் கடிதம் ந.க.எண். I99ZY2GV/62105/2026/PD/2026/TCP நாள்.27.03.2026

உத்திரவு :

பார்வையில் கண்ட மாவட்ட நகர் ஊரமைப்பு துணை இயக்குநர் பெரம்பலூர், அவர்களின் உத்தரவில் பெரம்பலூர் நகராட்சிக்குட்பட்ட வார்டு.எண்.15, பெரம்பலூர் வடக்கு கிராமம், சர்வே எண் –148/2F1B,2F2B2,–ல் அமையும் மனை உட்பிரிவிற்கான பரப்பு 0.23 ஏக்கர் (அ) 932.00 ச.மீ கொண்ட மனை எண்கள். 1,2,3,4,5 என எண்ணிடப்பட்டு, ம.வ/ந.ஊ.து.இ (பெ.மா) எண்.31/2026 மனை உட்பிரிவிற்கான தொழில்நுட்ப ஒப்புதல் வரைபடம் (திட்டமில்லாத பகுதி) வழங்கப்பட்டுள்ளது. மேற்கண்ட மனை உட்பிரிவிற்கான நிலப்பயன் மாற்றக் கட்டணம் (3%) ரூ.91,000/– அரசு கணக்கு தலைப்பில் E.Challan.எண். 20260406021667 நாள். 07.04.2026 அன்று செலுத்தப்பட்டது.

எனவே, மாவட்ட நகர் ஊரமைப்பு துணை இயக்குநர் பெரம்பலூர் அவர்களின் வரைபட ஒப்புதல் நிபந்தனைகளின் படி மேற்கண்டுள்ள மனை உட்பிரிவிற்கான தொழில்நுட்ப இறுதி ஒப்புதல் அளித்து உத்தரவிடப்படுகிறது.

நிபந்தனைகள்

1. இம்மனை உட்பிரிவுக்கு உள்ளாட்சியால் இறுதி ஒப்புதல் வழங்கும் முன் இடத்தில் எவ்வித நில ஆர்ஜித நடவடிக்கை எடுக்கபடவில்லை என்றும் எந்த துறைக்காகவும் நில ஆர்ஜித பட்டியல் மாவட்ட வருவாய் அலுவலருக்கு அனுப்பபடவில்லை என்றும் உள்ளாட்சி உறுதி செய்ய வேண்டும்.

2. நில உரிமை குறித்து உள்ளாட்சி நிர்வாக அதிகாரி முழு திருப்தியில் உள்ளது என சான்றளித்துள்ளதன் பேரில் இம்மனைப்பிரிவிற்கு தொழில் நுட்ப ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது.

3. அரசானை எண்.18 நகராட்சி நிர்வாகம் (ம) குடிநீர் வழங்கல் துறை நாள்: 04.02.2019–ன் படி அரசு வழிகாட்டி மதிப்பின்படி உரிய தொகை செலுத்தப்பட வேண்டும்.

4. நில உரிமை குறித்து வழங்கப்பட்ட சான்றுகள் மற்றும் பரிசிலனைக்கு சமர்பிக்கப்பட்ட ஆவணங்கள் சரியானவை அல்ல என அரியப்பட்டால் அல்லது மனைப்பிரிவுக்கு தொழில்நுட்ப ஒப்புதல் வழங்கியதால் பாதிப்பு ஏற்படக்கூடிய சூழ்நிலை ஏற்படின் மனைப்பிரிவிற்கு வழங்கப்பட்ட தொழில்நுட்பட ஒப்புதல் எவ்வித முன்னறிவிப்பின்றி நகர் ஊரமைப்பு இயக்குநர், சென்னை அவர்களால் இரத்து செய்யப்படும்.

5. விற்பனைக்குண்டான மனைகளை விற்பனை செய்யும்போது இவ்வாணையின் நகலோடு நகர் ஊரமைப்புத்துறை ஒப்புதல் அளிக்கப்பட்ட வரைபடங்களையும் மனை வாங்குபவர்களுக்கு கட்டாயம் வழங்கப்பட வேண்டும்.

6. நகர் ஊரமைப்புத்துறை சட்டப்பூர்வமாக தொழில்நுட்ப அனுமதி அளிப்பதன் முன்பு விண்ணப்பதாரரின் பேரில் உள்ள நிலஉரிமையை உறுதிப்படுத்தவில்லை. தொழில்நுட்ப அனுமதி/ திட்ட அனுமதி அளிப்பதற்கு முன்பு விண்ணப்பதாரரின் விண்ணப்பத்துடன் சமர்ப்பித்த ஆணைங்களில் கிரயப்பத்திரம் குத்தகை குத்தகை பத்திரம், பட்டா, தானப்பத்திரம், பொது அதிகார பத்திரம் மேலும் பல விண்ணப்பதாரர் வளர்ச்சி செய்ய உரிமை உள்ளதா என்று பார்க்கப்படுகிறது

7. சொத்தினை வாங்க விரும்பும் எந்த நபரும் விண்ணப்பதாரருக்கு சொத்தின் மீது உள்ள உரிமை தனியாக உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும், மேலும் அதன் மேல் வேறு யாரேனும் தனி நபர் உரிமை கோரினால் அவர்கள் அதனை பொருத்தமான தகுதியுள்ள நீதிமன்றத்தின் முன் தீர்த்துக்கொள்ளலாம். இதனை முடிவு செய்ய நகர் ஊரமைப்புத்துறை பொருத்தமான அமைப்பு அல்ல.

8. ஒப்புதல் அளிக்கப்பட்ட மனைப்பிரிவு வரைபடத்தினை எவ்வித மாற்றமும், விடுதலின்றி மனைப்பிரிவு நுழைவாயிலில் 6*4 அளவிலான நிரந்து தகவல் பலகை மூலம் பொதுமக்கள் பார்வைக்கு நிரந்தரமாக பிரசுரிக்கப்பட வேண்டும்.

உத்தேச மனைப்பிரிவு அமையும் நிலம் தொடர்பாக நீதிமன்ற வழக்கு ஏதேனும் நிலையில் இருப்பின் இத்துறை மனைப்பிரிவு அனுமதி செல்லத்தக்கது அல்ல.

10. உத்தேச மனைப்பிரிவின் ஊடே நீர்நிலைகள் அமையுமாயின் அதற்கு பாதிப்பு ஏற்படாதவாறு கட்டிடங்கள் கட்டபட வேண்டும்.

11. உத்தோ மனைப்பிரிவின் ஊடே HT Line, LT Line மற்றும் Telephone Line செல்லுமாயின் அதனை சாலையின் போக்கிற்கு ஏற்றவாறு மாற்றியமைக்கப்பட வேண்டும்.

12. உத்தேச மனைப்பிரிவு இடத்தில் கட்டிடம் கட்டும் போது உரிய விதிகளை பின்பற்றி உரிய அனுமதி பெற்று கட்டப்பட வேண்டும்.

13. உத்தேச மனைப்பிரிவில் எந்தவித மாற்றம் செய்வதாக இருந்தாலும் இத்துறையின் முன் அனுமதி பெறப்பட வேண்டும்.

14. உத்தேச மனைப்பிரிவில் அமையும் 1.2மீ அகலவிஸ்தரிப்பு சாலையினை உள்ளாட்சி அமைப்பிற்கு தானமாக ஒப்படைப்பு செய்யப்பட்ட பின்னரே இறுதி ஒப்புதல் பெறப்பட வேண்டும்.

இணைப்பு : மனை ஒப்புதல் வரைபடம் – 1

ஆணையாளர்(மு.கூ.பொ)
பெரம்பலூர் நகராட்சி

பெறுநர் :

திரு. சுரேஷ்,
த/பெ ராஜேந்திரன்
63/10, வடக்கு தெரு
துறைமங்கலம்,
பெரம்பலூர் வட்டம்,
பெரம்பலூர் மாவட்டம்–621220

நகல் :

1. மாவட்ட நகர் ஊரமைப்பு துணை இயக்குநர்,
   பெரம்பலூர் மாவட்டம்.